தினமணி 16-10-10

# பொறியியல் படிப்புகளுக்கான ரேங்க் பட்டியல்: ஸ்ரீ சாய் ராம் கல்லூரிக்கு 4 தங்கம்

சென்னை, அக். 15: இணைப்பு கல்லூரிகளுக்கான 2009-10-ம் கல்வியாண்டு பொறியியல் படிப்புகளுக்கான ரேங்க் பட்டியலை அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

இதில் சென்னையில் உள்ள ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரி 4 தங்கப் பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது. இக்கல்லூரியைச் சேர்ந்த பி.இ., மாணவர்கள் ஜி. ராகவன், எஸ். சங்கரலட்சுமி, எம்.பி.ஏ., மாணவர் ஹெச். ராஜ்குமார், எம்.இ., மாணவி எஸ். பிரேமலதா ஆகியோர் அதிக மதிப்பெண் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளனர். சென்னையைச் சேர்ந்த செயின்ட் ஜோசப்ஸ் பொறியியல் கல்லூரி, வேலம்மாள் பொறியியல் கல்லூரி மற்றும் ஈரோட்டைச் சேர்ந்த கொங்கு பொறியியல் கல்லூரி ஆகியவை தலா 3 தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளன.

பல்கலைக்கழக ரேங்க் பட்டியலில் செயின்ட் ஜோசப்ஸ் பொறியியல் கல்லூரி முதலிடம் பிடித்துள்ளது. இக்கல்லூரியைச் சேர்ந்த 59 மாணவர்கள் பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்றுள்ளனர். வேலம்மாள் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 58 மாணவர்களும், கொங்கு பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 46 மாணவர்களும், ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 43 மாணவர்களும், ஸ்ரீ சிவ சுப்பிரமணிய நாடார் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 30 மாணவர்களும் பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்றுள்ளனர். ரேங்க் பட்டியலில் 120 இணைப்பு கல்லூரிகள் இடம்பெற்றுள்ளன.